# பாகற்காய் சாகுபடி



Rediar Chattiram Seed Growers Association

COMMONWEALTH of LEARNING

*Learning for Sustainable Development*

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பட்டம் | 4 |
| 2 | பாகற்காய் சாகுபடி 1 | 4 |
| 3 | பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 2 | 4 |
| 4 | பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 3 | 4 |
| 5 | பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 4 | 4 |
| 6 | பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 5 | 4 |
| 7 | பாகற்காய் குழி நடவு தொழில்நுட்பம் | 5 |
| 8 | நிலம் தயாரிப்பு | 5 |
| 9 | தொழுஉரம் | 5 |
| 10 | ரகம் | 5 |
| 11 | பயிர் இடைவெளி | 6 |
| 12 | விதை அளவு | 6 |
| 13 | விதை நேர்த்தி | 6 |
| 14 | உர நிர்வாகம் | 6 |
| 15 | நுண்ணுரம் | 6 |
| 16 | நீர் நிர்வாகம் | 6 |

| | | |
|---|---|---|
| 17 | களை நிர்வாகம் | 6 |
| 18 | இலைபேன் தாக்குதல் | 6 |
| 19 | கோலப்பூச்சி தாக்குதல் | 7 |
| 20 | நூற்புழு தாக்குதல் | 7 |
| 21 | காய்ப்புழு தாக்குதல் | 7 |
| 22 | மஞ்சள் இலை வைரஸ் நோய் தாக்குதல் | 8 |
| 23 | அறுவடை தொழில்நுட்பம் | 8 |

## பாகல் சாகுபடி தொழில் நுட்பம்

**பட்டம் :**

சித்திரை, ஆடி, ஆவணி.

**பாகற்காய் சாகுபடி 1**

பந்தல் முறையில் பாவை சாகுபடி செய்த விவசாயிகள் வரிசை நடவு முறையை பயன்படுத்தி வந்தார்கள் தற்சமையம் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் குழி நடவு முறையை பயன்படுத்தி ( சொட்டு நீர் போட்டு0 அதிக மகசூல் எடுத்துள்ளார் திண்டுக்கல் மாவட்டம் குரும்பபட்டியை சேர்ந்த திரு . நல்லதம்பி என்ற விவசாயி நான் குழி நடவு முறையை பயன்படுத்தி விவசாயம் செய்தால் எனக்கு களையை குறைக்க முடிந்தது, தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் நான் சொட்டு நீர் பாசனமுறையை பின்பற்றியதன் விளைவாக எனக்கு செலவு குறைவு மகசூல் அதிகமாகவே கிடைக்கிறது என்கிறார்.

https://www.youtube.com/watch?v=IcXvxEhCicI

**பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 2**

https://www.youtube.com/watch?v=ettN00iXnhY

**பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 3**

https://www.youtube.com/watch?v=iIdTRh8ZHAE

**பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 4**

https://www.youtube.com/watch?v=ItR8pbIDz5w

**பாகற்காய் சாகுபடி தொழில்நுட்பம் 5**

https://www.youtube.com/watch?v=0Hed4780-iM

**பாகற்காய் குழி நடவு தொழில்நுட்பம்**

https://www.youtube.com/watch?v=djSbNeBpbaA

**விதை அளவு :**

சாதாரகம் 1 கிலோ, ஒட்டு ரகமாக இருந்தால் 600 கிராம்

**விதை நேர்த்தி**

1 கிலோ விதைக்கு 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி விதை நேர்த்தி செய்து நட வேண்டும். 200 கிராம் ரைசோபியம், 200 கிராம் பாஸ்;போபாக்டீரியா இரண்டையும் ஆறிய வடி கஞ்சியில் போட்டு ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் கலந்து 24 மணி நேரத்திற்குள் நடவு செய்யவேண்டும்.

**நிலம் தயாரிப்பு**

3 முதல் 4 உழவுகள் வரை போடவேண்டும் மண் நன்றா கட்டி இல்லாமல் பொழ பொழவென உழுது இருக்க வேண்டும். களைகள் மற்றும் பிளாடிக் பொருட்கள் , கல் முதலியவை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்

**தொழுஉரம்**

ஏக்கருக்கு 4 டன் தொபுஉரம் அல்லது மண்புழு உரம் 1 டன் இட வேண்டும். ஆட்டுக்கிடை அமர்த்தி நட்டால் பயிர் நன்கு வளரும், அதிக மகசூல் தரும். விதை நட்ட5ம் நாள் 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை நன்கு மக்கிய பழைய ஆறிய எருவில் கலந்து வயலில் ஈரம் இருக்கும் போது விதைக்க வேண்டும்.

**ரகம் :**

மெழுகுபாவை, குருந்தலைபாவை, மிதிபாவை. ஒட்டு ரகம்

**நுண்ணுரம்**

நுண்ணுரம் ஒரு ஏக்கருக்கு 5 கிலோவை 15 கிலோ மணலுடன் கலந்து தூவிவிட வேண்டும்.

**பயிர் இடைவெளி**

வரிசைக்கு வரிசை 10 அடி, செடிக்கு செடி 2 அடி

**களை நிர்வாகம்**

சிறிய செடியாக இருக்கும் போது களைகள் 15 நாட்களுக்கு ஒரு முறை வெட்ட வேண்டும். செடி வளர்ந்து பந்தலை அடைத்துவிட்டால் மாதம் ஒரு முறை களை எடுத்து உரம் போட வேண்டும்.

**நீர் நிர்வாகம்**

4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மேலும் காய் அறுவடைக்கு முதல் நாள் தண்ணீர் விட்டுத்தான் அறுவடை செய்ய வேண்டும். காய் அறுவடை செய்த பின் மறு நாளே தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**உர நிர்வாகம்**

20 நாட்களுக்கு ஒருமுறை களை வெட்டி 1 ஏக்கருக்கு டி.ஏ.பி. 25 கிலோ பொட்டாஷ் 25 கிலோ இரண்டையும் சமபங்காக பிரித்து இரண்டு முறை இடவேண்டும்.

**இலைப்பேன் தாக்குதலின் அறிகுறி**

பயிர் நடவுசெய்த 25 ம் நாள் இலையின் மேல் எறும்பு இருக்கும். இலையின் உள் பகுதி மடங்கி இருக்கும்.

**கட்டுப்படுத்தும்முறை**

இமிடாகுளோர் ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

**கோலப்பூச்சி தாக்குதலின் அறிகுறி**

இலையின் பின்புறம் கோடுகோடாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறை**

மோனோகுரோட்டோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீரக்கு 4 மில்லி என்ற அளவில் கலந்து மாலை வேளையில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**நூற்புழு தாக்குதலின் அறிகுறி**

செடியின் தண்டுப்பகுதி பூமியில் இருந்து 1 அடிக்கு மேல் வீங்கி காணப்படும். தண்டுப்பகுதி வீங்;கி இருந்தால் செடியின் காய்ப்புத்தன்மை, வளர்ச்சி குறையும், மகசூல் பாதிக்கும்.

**கட்டுப்படுத்தும் முறை**

விதை நட்ட 15 முதல் 20 நாட்களுக்குள் பியூரடான் 5 கிலோவை 20 கிலோ வேப்பம்புண்ணாக்கில் கலந்து தூவ வேண்டும்.

**காய்ப்புழு தாக்குதலின் அறிகுறி**

பூ, பிஞ்சு, காய் முதலியவற்றை தாக்கும்.

**கட்டுப்படுத்தும் முறை (இயற்கை முறை)**

டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டை கட்டலாம். 1ஏக்கருக்கு 4 சிசி இனக்கவர்ச்சிப்பொறி ஒரு ஏக்கருக்கு 6 இடத்தில் பயிருக்கு ஒரு அடிக்கு மேல் வைத்து கட்ட வேண்டும்.

**கட்டுப்படுத்தும் முறை (இரசாயன முறையில் )**

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4 மில்லி எண்டோசல்பான் அல்லது குளோரிபைரிபாஸ் இதில் ஏதாவது ஒன்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**மஞ்சள் இலை வைரஸ் நோய் தாக்குதலின் அறிகுறி**

இலை சுருண்டு சிறுத்து, பழுத்து மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

**கட்டுப்படுத்தும்முறை,**

மூன்று நாள் புளித்த தயிரை மாலை வேலையில் தெளிக்க வேண்டும். ஸ்டெப்டோ சைக்கிளின் 12 கிராம் அல்லது பிளாண்டோ மைசின் 50 கிராம் தெளித்து கட்டுப்படுத்தலாம்

**அறுவடை தொழில்நுட்பம்**

வாரம் ஒரு முறை காய்களை அறுவடை செய்ய வேண்டும்.